மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 263, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

263—

கூடுதல் கட்டட வசதி

***8639—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில் ஏற்படுத்தப்பட்ட, வட்டம் சாரா அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி, அரசு வட்டம் சாரா மருத்துவமனையில் கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்தித் தரவும், மருத்துவ வசதியை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில், வட்டம் சாரா மருத்துவமனை கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அதற்குப் போதிய மருத்துவர்கள் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. அதேபோல போதிய பணியாளர்களும் நியமனம் செய்யப்படவில்லை. கூடுதல் சிகிச்சைப் பிரிவுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அவற்றைச் செய்வார்களா? அவை எந்த நிதி ஆதாரத்திலிருந்து ஏற்படுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாகவும், அரசு மருந்தகங்களை மருத்துவமனைகளாகவும் பெயர் மாற்றம் செய்தார்களே தவிர, அதற்கான எந்த விரிவாக்கத்தையும் அந்த ஆட்சிக் காலத்திலே அவர்கள் செய்யாததால்தான் குறிஞ்சிப்பாடி மருத்துவமனையிலே இப்போது வசதியற்ற நிலைமை இருந்து வருகிறது. இருந்தாலும், குறிஞ்சிப்பாடி தொகுதி மக்களுடைய மருத்துவ

2002 மே 2]

வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில், NABARD வங்கியின் நிதியுதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில், ரூ.89.08 இலட்சம் செலவில் 20 படுக்கைகள், ஒரு X-Ray Block, ஒரு புறநோயாளிகள் கட்டடம், scan வசதி, Laboratory வசதி ஆகிய வசதிகளுடன் கூடிய விரிவாக்கத்தைச் செய்வதற்காக, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ரூ.89.08 இலட்சம் அளவுக்கு முன்மொழிவுகளைத் தயார் செய்து, NABARD உதவி பெற நிதித் துறையினுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஒப்புதலைப் பெற்ற பிறகு இதுபோன்ற விரிவாக்கம் அங்கே செய்யப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால கலைஞர் அரசில், கடைசி ஆண்டு இறுதியில்தான் அந்த மருத்துவமனை விரிவாக்கம் செய்யப்பட்டது. அதுவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அது ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றத்தின் காரணமாக, எங்களால் அதை நிறைவேற்ற இயலவில்லை. மேலும், புதிதாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அதற்குப் பிறகும் எந்த அடிப்படை வசதிகளும் அதில் ஏற்படுத்தவில்லை என்ற கருத்திலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அதுபோல, கடந்த கால ஆட்சியில், கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய் அளவுக்கு World Bank மூலமாக அனைத்து அடிப்படை வசதிகளும்—மருத்துவமனைகளுக்கு அடிப்படை வசதிகள்—செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், அந்தத் திட்டத்திற்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது. அதனுடைய முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது; அதற்கு அனுமதி கிடைத்துவிட்டதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அனுப்பிய அந்தக் கருத்துரு உலக வங்கியினாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சரியான முறையிலே அவர்கள் அதைத் தயாரித்து அனுப்பாத காரணத்தினாலே, அது திருப்பி

அனுப்பப்பட்டுவிட்டது. திருப்பி அனுப்பப்பட்ட அந்த முன்மொழிவை நாங்கள் மறுபரிசீலனை செய்து, உலக வங்கி கேட்ட அந்த விதிமுறைகளின்படி புதிதாகத் தயாரித்து, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீண்டும் அந்தக் கருத்துருவை மத்திய அரசு மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உலக வங்கிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த 650 கோடி ரூபாய் நிதியை விரைவாகப் பெற்றுத்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பிரதம அமைச்சருக்கும் தனிப்பட்ட முறையிலே கடிதமும் எழுதியிருக்கிறார்கள். அதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அநேகமாக, இந்த நடப்பு ஆண்டிலேயே அதைப் பெறுவதற்கான முயற்சியை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 264, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

264—

குடிநீர் வசதி

***6695—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள கிள்ளை, பொன்னந்திட்டு, முடசல் ஓடை, எம்.ஜி.ஆர். திட்டு ஆகிய பகுதிகளில், குடிநீர் இல்லாததால், அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட பொன்னந்திட்டு, முடசல் ஓடை பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாகவும், எம்.ஜி.ஆர். திட்டு, வடக்கு முடசல் ஓடை ஆகிய பகுதிகள்